

# நவமணிக்கீதம்.

இஃது
பவானி தாலூகா குறிச்சி கஸ்பாவிலுள்ள

## ஆலயங்களையும்
## மூர்த்திகளையும்பற்றி

குறிச்சி
**K. S. பொன்னுசாமி கவுண்டரும்**
உடுமலைக்குறிஞ்சி
குமாரானந்தசாமிகளும்
பாடப்பெற்று

ரணி கோல்டன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது
1923

O2:41
N23
177317





ஸ்ரீமதேராமாநுஜாய நம:

சுபம்.

## வினாயகர் காப்பு.

வெண்பா.

பூவிலுயர் பூங்குறிச்சி பொற்புமிகுஞ் சாமிகள்மேற்
பாவிலுயர் மேவுகவி பாடுதற்கு—தேவிலுயர்
விற்பிடித்த பொற்கரத்தர் மெச்சிய மகத்வசுத
கற்பகவி னாயகனே காப்பு.

## விக்நேஸ்வரர் துதி.

வெண்பா.

ஆனையுரு வாகவனம் ஆறுமுகற் காகமுனம்
போனகுரு நாதசிவ பூரணனே—தானவனைச்
சங்கரித்துஞ் சந்தியிலே தானிருந்தும் வாகனமா
யுங்குறித்துக் கொண்டி ருவந்து.

## சரஸ்வதி ஸ்தோத்திரம்.

வெண்பா.

வெண்டா மரைமலரின் மீதிருக்கும் வேதியனும்
பண்டே யுனைநாவில் பாரியெனக்—கொண்டே
குலவினன் கோலா கலமுடனே கொஞ்சிக்
குலவியான் பாடவருள் கூர்.

## லக்குமி ஸ்தோத்திரம்.

வெண்பா.

திருப்பாற் கடலெழுந்த சிதேவி யேநின்
அருட்பால் கொடுத்துமிக வாள—விருப்பால்
உனதுபத மோதினேன் ஓங்குபுகழ் மாதே
மனதுமகிழ் வாகவுநீ வா.

## சொக்கநாச்சியம்மன் ஸ்தோத்திரம்.

வெண்பா.

மிக்க புகழ்படைத்த மேதினியில் நீள்குறிச்சிச்
சொக்கநாச் சித்தாய்க்குச் சோபனமாம்—எக்காலும்
பூசையபி ஷேகம் பொருத்தமாய்த் தானடத்தி
வாசமல ரேசாற்று வாம்.

## மரகதாம்பாள் துதி.

வெண்பா.

தேனே சிவனிடத்தில் சிங்கார மாய்விளங்கும்
மானே மரகதமே மாமயிலே—வானோர்
பணியும் திருவுருவே பார்பதியே கண்ணே
மணியே யருள்புரிய வா.

## மாதேஸ்வரர் துதி.

### வெண்பா.

மாலினைமுன் னேராக்கி மாரனைமுன் னீராக்கிக்
கோலமத யானைதனைக் கொன்றுரித்து—மேலணிந்தே
வேதோ உபநிஷத்தை வேதியர்கள் தானுரைக்க
மாதே சுரனாக வந்தீர்.

## வரதராஜப்பெருமாள் ஸ்தோத்திரம்.

### வெண்பா.

பாரதனில் வேழமுனைப் பண்பா யழைத்திடவே
சாரங்க மேந்திமுனம் தான்சென்றாய்—சாரதியாய்
உற்றாய் ரதமதனில் உண்மையா மன்பருக்கு
கற்றாய் கரிவரத நாதா.

## சுப்ரமணியர் துதி.

### வெண்பா.

சத்தி புதல்வா சரிகமப தாவென்னும்
முத்திதரு மின்னிசையை மோகமாய்—எத்திசையும்
உன்னன்பர் என்னாளும் ஓதவே யுன்னருளை
மன்னி வரமளிக்க வா.

ஆரிரண்டு தோளாவுன் அன்பர்க் கருள்புரிய
நாரிரண்டு பேருடனே நன்குருகூர்—பாரொருமூன்
றும்படைத்த நான்முகற்கும் தும்பியப்பன் விண்ணோர்க்கும்
நம்பவுரை செய்திட்ட நாதா.

## தலைவி தோழிக்குரைத்தல்.

### வெண்பா.

அடியே சகியே அவரெங்கே போனார்
கடிதாகப் போய்க்குகனைக் கண்டு—படிமீது
நன்னீத மாக நலமான் கலவிசெய
வன்னாதனைக் கூட்டி வா.

## தலைவி குறிப்புரைத்தல்.

வெண்பா.

கோலாக லக்குயிலே கொங்கிலுயர் வாங்குறிச்சி
வேலாயு தக்கடவுள் மேவியதால்— லீலைசெய்து
பெற்றே னொருபயனைப் பேரின்ப வாழ்வுபெற
வுற்றேனே சேடியிது வுண்மை.

## ஏரிமுனீசுரர் துதி.

வெண்பா.

சீரிலங்கு மாவணியாம் சிற்றிடையார் கூடிமரு
வூரின்பே ராங்குறிச்சி யுன்னிதமாம்—பாரிதிலே
ஏரிமுனியப்பனுக்கு எற்றதிரு நாள்நடத்த
வாரிமழை பெய்யவே வந்து.

## சுப்ரமணியர்மீது கலித்துறை.

### தலைவி பாங்கிக்குணர்த்தல்.

சேடீ யுனக்கொரு சேதிசொல் வேனந்தச் சீர்முருகன்
தாடீ யெனக்கொரு தண்முத்த மென்னவே தாவிவந்து
ஏடீ யிதுவென்ன வுன்னு லியலாதோ வேந்திழையே
வாடீ யெனவு முறையாடி என்னை மருவினனே.

### தலைவி பாங்கிக்குக் கட்டளையிடுதல்.

கலித்துறை.

மானே மலைநிகர் கும்பஸ் தனமுள மாங்குயிலே
ஊனே உயிரே உலகோர் புகழ்ந்திடு மோவியமே
தேனே நிகழுந் திருவே குறிச்சியிற் றேசிகனை
நானே மருவ வழைத்துநீ வாடியென் னுயகமே

## ஸ்ரீ விஷ்ணுவின்மீது

### தலைவி தோழியை வற்புறுத்தல்.

கலித்துறை.

மாதே யிளமுலை மாமயிலே யிந்த மாநிலத்தில்
தீதே பலபுரி தீயவஞ் ஞானத் திடையிலலை
யாதே வுனிதய மன்புபூண் டென்னுளு மாதவனை
ஓதே வுபயசெந் தாமரைப் பாத மூலகினிலே.

### தலைவி பொறிபுலன்களை வற்புறுத்தல்.

கலித்துறை.

கண்ணே மணியே கவனமாய்க் கேட்கின்ற காதுகளே
பண்ணே பகர்வாய் பரிமள மூக்கே பரிசமுடல்
எண்ணே யிருதய மேயிருகால் லக்க ளேயிதமாய்
நண்ணே கரிவா தன்சேவை செய்யநன் னுளிதுவே.

### நகர்ச்சிறப்பு. விருத்தம்.

சீர்பெருகுஞ் சிவனடியார் திருக்கூட்ட
மெஞ்ஞான்றுந் திகழுஞ் சோதி
தார்பெருகுந் தகமைசேர் தண்ணளியாம்
விண்ணவர்கள் தாமுங் கூடி
ஊர் பெருகுங் காவணமுஞ் சிற்றூரின்
கரையோா முவந்து நோக்கப்
பேர்பெருகும் பிரபலமா யனுதினமும்
புகழ்குறிச்சி பெருமை மாதோ.

## கணேசர்மீது விருத்தம்.

) கங்கையுமை பாலனே எங்கள் குருநாதனே
கருணைமிகு மால்மருகனே
கன்னிகுறவள்ளியின் மைத்துனு தெய்வானை
கணவனுக்குரிய தமையா
மங்கள விநோதனே ஐங்கர விலாசனே
மாம்பழந்திகழுலாசா
மத்தகஜ மாமுகா வித்வசுகமேமகா
மாதவர்க்கினிய சுகுணு
இங்கிதமிகுந்தவிரு மங்கையர் மணாளனே
ஏக வடிவாகவுலகில்
ஏதமொன்றில்லாத வேதவேதாந்தமே
எங்குநிறைகின்ற பொருளே
கொங்கினில் விளங்குமுயர் தங்கமே துங்கமே
கோலக் குறிச்சிதனில்வாழ்
குழகனே பழவினையகன்றிடக் கோறினேன்
கூறரிய கணநாயகனே.

(2) அப்பமொடு தோசையவலெட்பொறி
யனேகவித மாமமிர்த நைவேத்தியம்
அன்பாகவே மோதகங்களொடு பாயாச
மதிரசந் தேன்பாகுடன்
இப்புவியிலே பெரிய யோகிகளும் ஞானிகளும்
இல்லறத்தோர்கள் ரிஷிகள்
எல்லோருமுந்தனுக் குல்லாசமாகவே
இனியவறுசுவையளிக்கக்
கப்பியசிவோகமே முக்கனியமோகமே
கயமுகா சூரனிடமே
கைதேர்ந்த யுத்தங்கள் மெய்சோரவே செய்து
கதரும்படிக்குமுனமே

குப்பினிடையேகவே அற்புதமதாகவே
கொல்லாமல் வாகனமதாய்க்
கொண்டுபுகழ்மேவிக் குறிச்சிதனில்வாழ்கின்ற
குஞ்சரக் கணாரயனே.

(3) சந்தானநீடு மரிசந்தனங்கற்பகந்தாவு
மந்தார நிழலிற்
றங்கமுடி புனைகின்ற வன்பாரிசாதமலர்
தான்கொண்டுவந்துபணிய
இந்தானவெழுமாதர் தந்ததனவென் றுநட
மிட்டிடச் சிட்டர் தொழவும்
என்பெலாமுருகியே கண்புனல் பெருகியே
ஏழிசைகளிருவர்பாட
வுந்தான தருமமொடு வந்தனஞ் செய்துசே
வூர்த்தியரிய யனுமிந்த
உலகமதில்யாவரும் கலைமுனிவர் தேவரும்
உன்பாத கஞ்சமருவ
கொந்தாரு நவமணிகள் கந்தாங்குலவிடக்
குஞ்சிதிருமஞ்சன மெழிற்
கொங்கில் வடகரைநாடு மேவுங்குறிச்சியிற்
கோமளக் கணாரயனே.

(4) மையலால் வாடினேன் மான்போலவோடினேன்
மட்டுமிதமில்லாமலே
மருவினேன் சருவினேன் குருவிபோலறிவிலேன்
வாசிநிலையுணராமலே
உய்யலாமென் றுனைத் தேடினேன் பாடினேன்
ஓங்காரமானவடிவே
ஒன் றுமறியாதவன் மன் றுள்வழிகாணவே
யோசித்திடாத மூடன்
வையலாமையனே மாதாபிதாவாக வாழ்த்தலா
மவ்வயார்போல்

வையகந்தனிலேகையினல் மெய்யனே
வாவென்று தூக்கிவிடவுங்
கொய்யலாமாணவங் கூவிளங்கொன்றையறு
கோடுகவிமாலைபுனையுங்
கொற்றவா நீதக்குறிச்சிதனில் வாழ்கின்ற
குண்டலக் கணாாயனே.

(5) வெட்டவெளிநாடவே சிட்டருறவாடவே
வீம்புகளெலாமகலவே
மேவுசிவஞானமே பாவலர்கள் மோனமே
வேறெவருமறியாததோர்
விட்டகுறை நாடியே எட்டிரண்டாகியே
விரியுமலர் தெரியுமதனில்
வீணையொலிகாணவே தியானமொடு பேணவே
வீசுமதியமிர்தமுண்டு
கட்டவிருகாலையுந் திட்டமுடனுலையும்
கங்குல்பக லற்றவிடமே
கருதிவிளையாடவும் மிருவினைகளோடவும்
கவிபாடவேணும் ஐயா
குட்டமொடுவிப்புருதி கெட்டசொறியற்றுமே
கோடிபாவங்கள் தீரக்
கொங்கிலுயர்வாங்குறிச்சிப் பதியில்வாழ்கின்ற
குங்குமக் கணாாயனே.

வாழி.

கலிவிருத்தம்.

கொங்கு வாழி குறிச்சியும் வாழியே
தங்கிவாழுஞ் சதாசிவன் வாழியே
பங்கிலேயுரும் பார்வதி வாழியே.
சங்குசக்கரன் வாழியென்னுளுமே.

## விநாயகர் துதி.

சுஜனஜீவனு என்றமெட்டு.

பல்லவி.

கமலவாசனே தின
கரவிலாசனே தேவ (கமல)

அநுபல்லவி.

குமரிபாலகா பாசாங் குசஜலம்போதரா
தெய்வகுஞ்சரா திகழுஞ்சரா சாங்
குலவுமீசனே தேவ (கமல)

சரணங்கள்.

மூன்றுநேத்ரா முனிவர்ஸ்தோத்ரா முத்தமிட்க்ஷேத்ரா
கூன்பிறைமதி சடைக்கணிந்தெழில் குலவியகாத்ரா
ஈன்றவர்களை சுற்றி இன்பமாங்கனி பெற்றாய்
ஏழையேன் முறை கேளய்யா கொம்பி
லெழுதுஞ்சாஸ்திரா தேவ (கமல)

தும்பிக்கையா தூரியமெய்யா தொண்டர்பணிந்துய்ய
நம்பிக்கையுடன் குமாரானந்தன் நளினமலர்கொய்ய
உம்பர்மாலயன் பலரோதுங்குறிச்சியில்
அமுதுண்டவா அன்புகொண்டவா தவ
யோகனேதுய்யா தேவ (கமல)

---

கனுகொண்டினே என்றமெட்டு.

இராகம் பிலஹரி. தாளம் ஆதி.

பல்லவி.

விக்னேஸ்வரா வேண்டினேன் பொற்பாதா. (விக்)

அநுபல்லவி.

மிக்கவேணுகானன் சக்கரத்துக்காக
பக்குவமயாட பார்த்துமுன் சிரித்த (விக்)

சரணம்.

குண்டுவயிற்றோனே கூலியாள் நீதானே
குமாரானந்தன்சொற் கவிபுனைவோனே
வண்டுபோல்நொந்தேனே மண்டலத்தில் நானே
மாலின்மருகோனே மாரன் மைத்துனனே (விக்)

---

மருகேலரா என்றமெட்டு.

இராகம் பூபாளம். தாளம் ஆதி.

பல்லவி.

அருணைதயா ஆறுவாகனை (அரு)

அநுபல்லவி.

ஒருநாளும் நானே உனைமறவேனே
திருவருள்தானே செய்குவாயெங்கோனே (அரு)

சரணம்.

அந்திசந்தி யுச்சி அரசாள் குறிச்சி
இந்திரன்பேண மெச்சி எழுங்காகப் பட்சி (அரு)
சந்திர ஜடாதாரா சதுர்புஜ வீர
மந்திரமூலாதாரா வதன சிந்தூரா (அரு)
குமாரானந்தன்பண் கூறும்பிரகாசா
இமையாதவர்கண் ஹிருதயவாசா (அரு)

---

மாதேஸ்வரர் துதி.

மன்றுளாடியவா என்றமெட்டு.

இராகம் தேசிகதோடி. தாளம் ரூபகம்.

பல்லவி.

வேதமோதியவா மகா வித்வஜனகாதிமுனி
வோர்கள் விரை வாயுணா (வேத)

சரணங்கள்

ஆதவனம்புலி யங்கியின் நேத்திரா
அஷ்டதிக்குஞ் செவியாக்கிய காத்திரா
சாதன சதுட்டய மாதவர் ஸ்தோத்திரா
சாரங்கம் தழுவியகா ஸ்ரீரங்கன் பரவியசிவ (வேத)

பாதாதிகேசம் அரியயனுந்தேடி
பார்க்கமுடியாமற் பாவலர்க்காயோடி
சாதாரி ராகந்த ஊனமிகவே பாடி
சாமமதிலேமநாதன் பாமரனெனவுமேக (வேத)

பூதலமீதுபிர போதசுகம்நாட
புண்ணியவான்கள் புகழ்குறிச்சிநீட
மாதேஸ்வரா எந்தன் வல்வினைகளோட
வந்தாளிதுததி குமரா நந்தா நமபயமில்லையென (வே)

---

## மரகதாம்பாள் ஸ்தோத்திம்.

இராகம் கேதாரகௌளம். தாளம் ரூபகம்.

பல்லவி.

பூரணியே சுக பரி (பூர)

அநுபல்லவி.

நாராயணன் சோதரியே மிக
நானே உனதிருபதமற
வேனே மரகதநாயகி (பூர)

177317

சரணங்கள்.

பாதிமதிசூடியுற வாகவிளை
யாடுமரு ணர்மருவும் பார்பதியே
மாதாவென வேபுலவ்வார்புகழ்
மானே மதிமுக மேவுயர்
தேனே திரவியமேயருள். (பூர)

தெங்கமழு மாங்கமுகு பூங்கதலி யோங்கு
மெழிலாங்குறிச்சி மாநகரில்
பாங்காகவுன் மீதினிலேகவி
பாடியகுமாரானந்தன்
றேடியபிரமானந்தன் (பூர)

---

## சொக்கநாச்சியம்மன் துதி.

அம்மா மதுரைமீனாக்ஷி என்றமெட்டு.

கண்ணிகள்.

பூவிலுயர்ந்தசொக்க நாச்சி தமிட்
புலவர் புகழ்மீனாக்ஷி காமாக்ஷி
புனிதமான காக்ஷி
புரிவாயாசாக்ஷி புரிவாயாசாக்ஷி
புரிவாயாசாக்ஷி (பூவி)

ஆவிக்குரியவள் நீ தானே உன்னை
யன்றியார்சொல் மானே குறிச்சி
யதனில்வாழுந் தேனே
அடிபணிகுவேனே அடிபணிகுவேனே
அடிபணிகுவேனே (பூவி)

சூலகபாலம் பிடித் தாயே சிவ
சுப்ரமண்யன் றாயே மகிடா
சூரனை மடித் தாயே
சுகமருளுவாயே சுகமருளுவாயே
சுகமருவாயே. (பூவி)

பாலன் குமாரானந்த சாமி கவி
பகர விதிகள் நேமி சிங்காரப்
பாதபங்கயங் காமி
பார்பதி நிட்காமி பார்பதி நிட்காமி
பார்பதி நிட்காமி. (பூவி)

## ஸ்ரீ மஹாவிஷ்ணு ஸ்தோத்ரம்.

இராகம் கானடா. தாளம் சாப்பு.

பல்லவி.

கரிராஜவரதா எந்தன் கலிதீர்த்தருளும் நாதா

அனுபல்லவி.

அரியென்று சொல்லுமுன் யானைமுன் வந்தவா
கிரிதன்னைக்குடைபிடித் தாயருக்குகந்தவா (கரி)

சரணங்கள்.

தேரிலர்ச்சுனனுக்குச் சாரதியாய் நின்றாய்
திகழுஞ்சக்கரங்கொண்டு சயிந்தவனை வென்றாய்
தாரிலங்கிய மார்பன் கம்சனையுங்கொன்றாய்
தாயாமசோதைகாணத் தாவிமண்ணையுந்தின்றாய் (கரி)

எழு மராமரத்தைத் துளைத்து வாலியைவீழ்த்தி
இருவர்கள் சிரஞ்சீவி யாகவுலகில் வாழ்த்தி
தாழுயரக்கர்களை தகைத்து நாகிலாழ்த்தி
தழுவும் பரத்துவாசர் வதிஷ்டர் புகழயோத்தி (கரி)

நரிதன்னைப் பரிசெய்த நம்பனின் மைத்துனு
நாகத்தின்மீதுகு லாவிய கீர்த்தனு
உரிதன்னிற்றதியினை உண்டபிரசித்தனு
மோமெனும் பிரணவ உட்பொருட்கர்த்தனும் (கரி)

விரிபொழில் திகழ்சோலை விளங்குஞ்சிற்றூர்கூட
வேதியருடன்பல ஜாதியர் கொண்டாட
வரிவிழிமாதர்கள் வாழ்த்துங்குறிச்சிநீட
வம்புசெய்யுஞ்சில கும்பல்களும்ஓட (கரி)

இராகம் மோகனம் தாளம் ஆதி.

பல்லவி.

கண்ணாவுந்தன் கழலிணைமறவேனே கமலக் (கண்ணா)

அனுபல்லவி.

எண்ணாது மெண்ணியெண்ணி ஏழைமனஞ்சலித்து
புண்ணாகினேனே நெஞ்சம் புவிதனிலோமலித்து
புல்லர் பாலணுகாமலே தினம்
கல்விமான்கள் சிநேகமேதருங் (கண்ணா)

சரணங்கள்.

துருவன்றனக்குமுன்பு தோன்றிவரமளித்தாய்
கருவந்தனையடக்கிக் கருடனையும் விளித்தாய்
தருமர் பதவிபெறத் தயவாகத்தானளித்தாய்
கிருபர் துரோணரையுங் கிளையுடனே சுளித்தாய்
கீதையோதிய நீதனேபிர
போதஞானவி னோதனேயருள் (கண்ணா)

அன்பன் குசேலனுக்கு ஆனபொருள் கொடுத்தீர்
அந்தவிராவணனுக் கனுமானையும் விடுத்தீர்
இன்பமுடன் கிரியை எடுத்துமழைதடுத்தீர்
இகபரசுகந்தரப் பரவைதனிற் படுத்தீர்
எங்குமேகபுக ழுங்குறிச்சியி
லங்குமாதவ சிங்கமேதிகழ் (கண்ணா)

---

சிவலோக நாதனை என்றமெட்டு.

பல்லவி.

கரிராஜவரதனைக்கண்டு காட்சிபெருவோம் வாரீர் (கரி)

அனுபல்லவி.

திரிகாலமும் விரிமலர்ப்பதம் திகழுங்குறிச்சி
நகரில் ஜொலிக்கும் (கரி)

சரணங்கள்.

வஞ்சகருறவை மறந்தோம் மறு
மாதர்கள் மோகத்தைத் துறந்தோம்
தஞ்சமென்றேதாசர் தாளிணை தொழுது
தானதருமந் தியானமு மேசெய்து (கரி)

பந்தபாசங்களைப் போக்கி கிரு
பாகடாக்ஷம் பெற நோக்கி
எந்தவினைகளும் வாராமலே நீக்கி
ஏகவைபோகவி வேகவமோகனும் (கரி)

சங்குசக்கரத்தைப் பிடித்தார் திவ்ய
ஜானகியை மண முடித்தார்
அங்கிங்கென்னுமலே எங்கும் பரவிய
வாரணனும் பரி பூரணனுமுா (கரி)

---

## முருகக்கடவுள் ஸ்தோத்திரம்.

பாராமுகமேனையா என்றமெட்டு.

பல்லவி.

வேலா சரணம் சரணம் விண்ணவரனு
கூலா சரணம் சரணம் (வேலா)

அனுபல்லவி.

காலாகலை முனிவர் பாலே நவலுங்குண
சீலா தெய்வானைவள்ளி லோலா திகழ்குறிச்சி (வேலா)

சரணங்கள்.

கோலாகலமயிலின் மீதே சூலவிவரும்
பாலா சீர்காழியிற்பண் பாகத்தேவாரமுன்பு
பாடப் பாவலர்கள்கொண்
டாட பாண்டியன்சுா
மோட பாமரர் முகம்
வாடச் செய்தவிசேட (வேலா)

நற்கீர தேவர்முனம் கற்கியிடமதனில்
சிக்கியுனை நினைக்க மிக்கவிரைவிற்சென்ற
தீரா சிங்காரநவ
வீரா சகோதரவொய்
யாரா தேரினிலேறிச்
செய்த சூரசம்மாரா (வேல.

இங்கிதஞானப்பிர சங்கவிற்பனர்பல
ரெங்கும் புகழ்குறிஞ்சி தங்குங் கொங்கினில்வாழ்
செங்குந்தன் தமிட்குமாரா
கந்தன். கும்பிடவிங்கு
வந்தன் கோபாலன்மரு
கோனே வுமது சொந்தன். (வே

---

## மங்களம்.

நீநாமரூடமுலகு என்றமெட்டு.

பல்லவி.

தேவாதி தேவர்கட்கு நித்யஜெய மங்களம் (தேவ


அனுபல்லவி.

பாவாணி பூமகட்கும் பாலசுப்ரமண்யனுக்கும் (தேவா)

சரணம்.

அன்பானவன்பர்கட்கும் ஆகமவிவேவிகட்கும் (தே
சுக்ராதி சூரியற்கும் சாமி குமாரானந்தற்கும் (தே

## பவானி முருகன்மீது பாடிய ரதபந்தம்.




### வெண்பா.

காவிரிசூழ் வாநாடன் காருண்ய முள்ளமகான்
கோவிருவர் காமுருமெய்க் கோவுவக்கும்—மாவுரிமே
நீடவணி நாலுமறை நீதர்மகா துங்கமொடுங்
கூடுதுறைமேவுமுருகோன்.